OS 246/2022

வா.சா.2 பூவரசன் த/பெ ஜெயமணி

நாள் 05.03.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. வாதி ஜெயமணி என் அப்பா என்றால் சரிதான். என் அப்பா அழைத்ததன் பெயரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. இதற்கு முன்பு ஆவணங்களில் சாட்சி கையெழுத்து போட்டு எனக்கு பழக்கம் உள்ளதா என்றால் இல்லை.

2. தாவா கிரைய ஒப்பந்தத்தில் என் அப்பா கேட்டுக்கொண்டதற்காக தான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் என் அப்பா கிரையம் வாங்குவதற்காக கிரைய ஒப்பந்தம் போடப்பட்ட அன்று சாட்சி கையெழுத்து போட சொன்னதால் போட்டேன். பிரதிவாதி தனது வீட்டினை கிரையம் தருவதாக சொல்லி கிரையஒப்பந்தம் போட்டுவிட்டு அதன் பிறகு கிரையப்பத்திரம் பதிவு செய்து கொடுக்கவில்லை என்ற காரணத்தினால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தனது வீட்டினை விற்பனை செய்தவதாக என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை என் அப்பாவிடம் சொன்னார். அவ்வாறு கிரையம் கொடுப்பதாக என் அப்பாவிடம் பிரதிவாதி சொன்னது பற்றி என் அப்பா சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் அப்பா சொன்னதால் தான் தாவா கிரைய ஒப்பந்தம் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான்.

3. தாவா சொத்தின் பழைய சர்வே எண்91/2 புதிய சர்வே எண் 242/3 ஆகும். தாவா சொத்தின் ஐக்பந்தி தெரியாது. தாவா கிரைய ஒப்பந்தத்தில் நான் இரண்டாவதாக சாட்சி கையெத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். முதல் சாட்சி கையெழுத்து போட்டுள்ளது சுப்பிரமணி மகன் பாலாஜி ஆவார். பாலாஜியையும் பிரதிவாதியும் உறவினர்கள் என்றால் உறவினர்கள் என்று எனக்கு தெரியாது ஆனால் அவர்கள் பழக்கம் ஆனவர்கள்.

4. முதல் சாட்சி கையெழுத்து செய்துள்ள சுப்பிரமணி மகன் பாலாஜியின் மூலமாக தான் என் அப்பாவிற்கு பிரதிவாதி பழக்கம் ஆனார் என்றால் சரிதான். பாலாஜி சொல்லி தான் பிரதிவாதி தனது மகனுக்கு கார் வாங்க வேண்டும் என்பதற்காக என் அப்பாவிடம் ரூ.2,00,000/- கடன் கேட்டார் என்றால் கடனாக கேட்கவில்லை கிரையம் கொடுப்பதாக சொல்லி தான் பிரதிவாதி பணம் வாங்கினார். பிரதிவாதி அடமான போட்டு தருவதாக தான் சொன்னார் என்றும் ஆனால் என் அப்பா தான் அடமான பத்திரத்திற்கு பதிலாக கிரைய ஒப்பந்தம் பதிவு செய்துகொண்டார் என்றால் சரியல்ல.

5. பிரதிவாதி எழுத படிக்க தெரியாதவர் என்றும் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவின் போது பதிவு செய்யப்பட்ட ஆவணம் கிரைய ஒப்பந்த ஆவணம் என்பது தெரியாமலே பிரதிவாதி கையெழுத்து செய்துவிட்டார் என்றால் சரியல்ல. அதேபோல் பிரதிவாதி கடன் வாங்கியதாக நினைத்து தான் சுப்பிரமணி மகன் பாலாஜியும் சாட்சி கையெழுத்து போட்டார் என்றால் சரியல்ல.

6. நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் கிரையம் கொடுக்கும் எண்ணத்தில் பிரதிவாதி பணம் வாங்கவில்லை என்றும் பத்திரப்பதிவு செய்து தரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதேபோல் என் பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி முன்தொகையாக

ரூ.2,50,000/- வாங்கியதாக சொல்லியுள்ளது தவறு என்றும் அவ்வாறு பிரதிவாதி ரூ.2,50,000/- பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. தாவா கிரைய ஒப்பந்தம் எழுதும் சமயத்தில் நானும் உடன் இருந்தேன். கண்ணமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அசோகன் என்பவர் கிரைய ஒப்பந்தம் தயார் செய்து கொடுத்தார். பத்திரம் எழுதிய அசோகன் கொளத்தூரை சேர்ந்தவர். கொளத்தூரில் உள்ள அசோகனின் வீட்டில் வைத்து தான் தாவா கிரைய ஒப்பந்தம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதி என் அப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அடமான பத்திரம் பதிவு செய்தவதாக சொல்லி மோசடியாக கிரைய ஒப்பந்தம் பதிவு செய்து கொண்டவர் என் அப்பா என்றும் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.